சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **94 / 2024**

பெயர்: தேவராசு வா.சா.2 தேதி **01.04.2026**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. இவ்வழக்கின் வாதிக்கும், எனக்கும் சொந்தமா என்றால் சொந்தம் தான். எங்கள் ஊரில் உள்ள பைனான்ஸ் நடத்தி வரும் கே.வி. சுரேஷ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது ஊருக்கு வந்து சுமார் 2 வருடம் ஆகிறது. நிரூபணம் வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தவிர மற்றவை எனக்கு எதுவும் தெரியாது. நான் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் கேரளாவில் விவசாய வேலை செய்துவந்தேன். கேரளாவில் இருந்தபொழுது ஊருக்கு விஷேசத்திற்கு மட்டும் வருவேன் என்றால் நல்லது, கெட்டதுக்கும் வருவேன். நான் முதல் விசாரணையில் கூறியதுபோன்று வாதியிடம் பிரதிவாதி கடன் பெற்ற சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் புதுப்பட்டியில் இருந்தேன். வாதியின் ஊருக்கும், எனது ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 06.08.2023ம் தேதி என்னை யார் அழைத்தார் என்றால் பிரதிவாதி அசோக் அழைத்தார். மேற்படி பிரதிவாதியும், நானும் உறவினர்கள். மேற்படி 06.08.2023ம் தேதி சென்றதாக கூறக்கூடிய நிலையில் எத்தனை மணிக்கு சென்றோம், யார் யார் சென்றோம் என்று முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் இல்லை. மேற்படி தேதியில் யார் வீட்டிற்கு சென்றேன் என்றால் பிரதிவாதி அசோக் காவல்காரன்பட்டிக்கு வந்தார். அங்கு பிரதிவாதி பணத்தை வாங்கிகொண்டு சென்றுவிட்டாரா என்றால் ராமசாமி வீட்டிற்கு சென்றோம்.

2. நான் வாதியிடம் எந்த தேதியில் பிரதிவாதி எதற்காக பணம் கேட்டார் என நான் கேட்டேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாதி என்னிடம் பிரதிவாதி எதற்காக பணம் கேட்டார் என்று சொன்னாரா என்றால் சொல்லவில்லை. நானும், அசோக் இருவரும் சென்றபொழுது வாதி வீட்டில் வேறு யாரும் இருந்தார்களா என்றால் வாதி மட்டும் இருந்தார். (சாட்சி பின்னிட்டு அவர், அசோக் மற்றும் ஒருநபர் வாதி வீட்டிற்கு சென்றதாக கூறுகிறார்). மூன்றாவதாக வந்த நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர் பெயர் சபாபதி. மேற்படி சபாபதி என்பவரை யார் அழைத்துவந்தார் என்றால் பணம் வாங்கியவர் தான் அழைத்து வந்தார். நாங்கள் வாதியின் வீட்டிற்கு சென்ற பணம் வாங்கினோம், பின்னர் வந்துவிட்டோம், வேறு எதுவும் நடைபெறவில்லை. மேற்படி பணம் வாங்கிய சமயத்தில் வாதியின் வீட்டில் சுமார் 15-30 நிமிடம் நேரம் இருந்தோமா என்றால் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். மேற்படி பண பரிவர்த்தனை நடபெற்றதாக

சொல்லக்கூடியதற்கு பின்னிட்டு வாதியிடமோ, பிரதிவாதியிடமோ மேற்படி சங்கதி பற்றி நான் கேட்டுக்கொள்ளவில்லை. என்னை சாட்சியம் அளிப்பதற்கு யார் அழைத்தார் என்றால் வழக்கறிஞர் தான் அழைத்தார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணம் வாக்குமூலத்தில் உள்ள சங்கதியை படித்து பார்க்கவில்லை, கையெழுத்து போட சொன்னார் போட்டேன். மேற்படி நான் சொல்லக்கூடிய நாளிலும், நேரத்திலும் பிரதிவாதியானவர் வாதியிடம் எவ்வித கடனும் பெறவில்லை என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.01 16:37:39 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.